## பாதுகாப்புச் சேவை கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரி – 2014

பாதுகாப்புச் சேவை கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரியின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2008 இன் 05 ஆம் இலக்க பாதுகாப்புச் சேவை கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரி அதிகாரச்சட்டத்தின் 21 (2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் பதவிநிலைக் கல்லூரியின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்படாத விடயங்கள் தொடர்பாகவும் நிதி நிலைமைக் கூற்று, விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 முதல் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலத்திற்குரிய ஒப்பந்தக்காரருக்குச் செலுத்த வேண்டிய நிறுத்தி வைத்தல் பணம் ரூபா 350,713 தொகை, நிறுத்தி வைத்தல் பணக் கணக்கிற்கு செலவு வைப்பதற்குப் பதிலாக காசேட்டில் செலவு வைக்கப்பட்டமையினால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காசேட்டின் மீதி ரூபா 350,713 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு களஞ்சியத்தில் காணப்பட்ட ரூபா 932,952 பெறுமதியான இருப்புக்கள் இறுதிக் கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு எஞ்சிய இருப்பை கணக்குகளில் சீராக்குவதற்குப் பதிலாக ஆண்டின் போது களஞ்சியத்திற்குக் கிடைத்த 249 இருப்பு விடயங்களின் பெறுமதியான ரூபா 5,985,980 தொகை இறுதியிருப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 1,667,177 தவறினைச் சரிசெய்தல் பின்னோக்கி சீராக்கம் செய்யப்பட்டு முன்னைய ஆண்டின் நிதி நிலைமை மற்றும் விளைவுகளில் மீள அறிக்கையிடுவதற்குப் பதிலாக முன்னைய ஆண்டில் முன்கொண்டுவரப்பட்ட திரண்ட இலாபத்தில் சீராக்கப்பட்டிருந்தது.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மைகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | 1971 இந் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 8(1) ஆம் பிரிவு | பாதீடு நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன் கட்டுப்பாட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் பாதீடு 2014 பெப்ரவரி 25 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | பொது முயற்சிகள் சுற்றறிக்கை<br>2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.1 ஆம் பிரிவு | மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட பாதீட்டில் பாதீடு செய்யப்பட்ட ஐந்தொகை பாதீடு செய்யப்பட்ட வருமானச் செலவினக்கூற்று மற்றும் பாதீடு செய்யப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்று என்பன உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வவாண்டிற்கான செயற்பாடுகளிலிருந்து உருவான நிதி விளைவுகள் ரூபா 3,251,730 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு உடனொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 1,115,201 ஆக இருந்தது. அதன்படி மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 2,136,529 தொகையான வீழ்ச்சியொன்று காணப்பட்டது. ஆண்டின் வருமானம் ரூபா 16,564,721 இனால் அதிகரித்திருந்த போதும்

ஆண்டின் செலவினம் ரூபா 18,701,250 இனால் அதிகரித்தமை நிதி விளைவுகளில் இந்த வீழ்ச்சிக்கு காரணமாக இருந்தது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

கல்லூரியின் பிரதான காவலரணை பரிசோதனை செய்த போது நிலையான கட்டளை அறிமுகப்படுத்தப்படாமை, வழங்குனரினால் பொருட்கள் கல்லூரிக்கு எடுத்துச் செல்லும் போதும் எடுத்து வரும் போதும் பிரதான காவலரணில் முறையான பரிசோதனைக்கு உட்படுத்தப்படாமை, உரிய பதிவேடுகளில் தேவைகளின் குறிப்புக்கள் இடப்படாமை மற்றும் கல்லூரிக்கு வெளியே பொருட்களை எடுத்துச் செல்லும் போது வாயிற்கதவு அனுமதிப்பத்திரம் பயன்படுத்தப்படாமையின் காரணமாக கட்டுப்பாட்டு முறைமை நலிவான நிலையில் காணப்பட்டதுடன் அதன் காரணமாக தவறு மற்றும் மோசடிகள் ஏற்படும் சந்தர்ப்பங்கள் உயர்ந்த மட்டத்தில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

**4.2 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க நிதி, திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கைக்கு இணங்கியதாக கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 இன் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 6.3.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கேள்வி திறத்தல் அட்டவணை பேணப்பட்டிருக்கவில்லை.

(இ) விடயம் தொடர்பான நிபுணத்துவமுடைய நபர்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவில் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பதவிநிலைக் கல்லூரியினால் சமையலறை உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக 2014 பெப்ரவரி 25 ஆந் திகதி கேள்வி கோரப்பட்டிருந்ததுடன் 2014 மார்ச் 05 ஆந் திகதி கேள்வி திறக்கப்பட்டு தெரிவு செய்யப்பட்ட மூன்று நிறுவனங்களிலிருந்து ரூபா 1,897,852 பெறுமதியான சமையலறை உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

i. Tilliting Bratt Pan உபகரணம் ரூபா 338,500 ஆகக் குறைந்த விலையில் கொள்வனவு செய்வதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசு பெறப்பட்டிருந்தது. அவ்வாறு இருக்கும் போது கொள்வனவு வழிகாட்டிகளுக்கு முரணாக கொள்வனவுக் குழுத் தலைவரின் அங்கீகாரத்தின் பிரகாரம் ஆகக்கூடிய விலையான ரூபா 675,000 சமர்ப்பித்த வழங்குனரிடமிருந்து மேற்கூறப்பட்ட உபகரணங்களின் இரண்டு அலகுகள் கொள்வனவு செய்தமையால் கல்லூரிக்கு ரூபா 673,000 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

ii. கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.5 ஆம் பந்தியின் படி பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது நாணயக்கடிதம் ஒன்றின் அடிப்படையில் 30 சதவீத முற்பணமொன்று செலுத்த இயலுமாகவிருந்த போதிலும் சோறு சமைக்கும் (Rice Steamer) உபகரணத்தைக் கொள்வனவு செய்யும் போது அதற்கு முரணாக ரூபா 146,402 தொகையான 80 சதவீத முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

(உ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 6.2.2 இன் படி சந்தை விலை தளம்பல் முறைமையின் கீழ் கேள்வி கோரும் ஆகக் குறைந்த காலம் 7 நாட்களாக இருந்த போதிலும் ரூபா 1,272,320 பெறுமதியான 4 காற்றுச்சீராக்கி இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்காக 2014 நவம்பர் 26 ஆந் திகதி கேள்வி கோரப்பட்டிருந்ததுடன் கையேற்கப்படுகின்ற இறுதித் திகதியும் அத்தினத்தின் மு.ப 11.00 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**4.3 வாகனப் பயன்பாடு**

பாதுகாப்பு அமைச்சு மற்றும் இராணுவத்திற்குச் சொந்தமாகக் காணப்பட்ட ரூபா 51,586,500 கிரயமான வாகனங்கள் கல்லூரியின் நடவடிக்கைகளுக்காக பல வருட காலமாக பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த அந்த வாகனங்களின் உரிமைத் தன்மை கல்லூரிக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 கூட்டிணைந்த திட்டம்**

2014 ஆம் ஆண்டிற்கு இணங்கும் வகையில் கூட்டிணைந்த திட்டம் திருத்தப்பட்டிருக்கவில்லை.

**5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்**

2014 ஆம் ஆண்டின் பதவிநிலைக் கல்லூரியினால் தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் கல்லூரியின் மூலதனச் செலவினம் மற்றும் நிலையான சொத்துக்களை கைப்பற்றுவதற்காக செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செலவினம் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அவை மாணவ உத்தியோகத்தர்களின் கல்வி நடவடிக்கைகளை நடாத்திச் செல்லல் என்பவற்றை உள்ளடக்கிய பிரதான நோக்கங்களுக்கு உரியதாக மேற்கொள்ளப்பட்ட முறை தொடர்பான தகவல்களை உள்ளடக்கி தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது பாதுகாப்புச் சேவை கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரியின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கொள்வனவு
(ஆ) பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள்
(இ) கணக்கேடுகளைப் பேணுதல்
(ஈ) முற்பணக் கொடுப்பனவு
(உ) பாதீட்டுக் கட்டுப்பாடு